

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நடுக்குத்தகை ஊராட்சி பகுதி சேர்ந்த 12 ஆம் வகுப்பு மாணவி பவித்ரா ஆவடி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 566 மதிப்பெண்கள் எடுத்து இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார் இந்நிலையில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பள்ளி மாணவிக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து உதவித்தொகை வழங்கினார். அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ் உட்பட குடும்பத்தினர்கள் உள்ளனர்.

## ஜோலார்பேட்டையில் புதிய திட்டப் பணிகள்

### க.தேவராஜ் எம்.எல்.ஏ. ஆய்வு

திருப்பத்தூர், மே 20 –

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம், வெலக்கல்நத்தம் பகுதியில் புதிய பயணிகள் நிழற்கூடம் அமைக்கும் பணியினை மாவட்டக் கழகச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கலந்து கொண்டு கட்டிட பணியினை தொடங்கி வைத்தார் . தொடர்ந்து வெலக்கல்நத்தம் பகுதியில் பொதுமக்கள் கழிவு நீர் கால்வாய் அமைக்க கோரிக்கை வைத்தனர். அதனை ஏற்று கழிவு நீர் கால்வாய் அமைக்க வேண்டிய இடத்தை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில் எம்.சிங்கார வேலன், ராமன், சூரவேல் உள்ளாட்சி பிரதிநிதிகள், கலந்து கொண்டார்கள்.



இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நேற்று (19.05.2025) சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.32.62 கோடி மதிப்பில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்டு வரும் விக்டோரியா பொது அரங்கத்தினை பார்வையிட்டு, மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில், மேயர் ஆர்.பிரியா, ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவ கிருஷ்ணமூர்த்தி, ராயபுரம் மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பாரிமுனை, காளிகாம்பாள் திருக்கோயிலில் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, மே 20 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (19.05.2025) சென்னை, எருக்கன்சேரி வேதாம்பிகா சமேத விஜய லிங்கேஸ்வரர் திரு க்கோயிலில் நடைபெற்ற திருக்குடமுழுக்கு பெருவிழாவில் பங்கேற்று சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து, பாரிமுனை, காளிகாம்பாள் க ம டே ஸ் வ ர ர் திருக்கோயிலில் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள திருப்பணி தொடக்க விழாவில் (பாலாலயம்) கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, நாள் தோறும் குடமுழுக்குகள் மற்றும் திருப்பணிகளை தொடங்கும் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் இன்றைய தினம் குடமுழுக்கு நடைபெற்ற 8 திருக்கோ யில்களில் எருக்கன்சேரியில் வேதாம்பிகா சமேத விஜயலிங்கே ஸ்வரர் திருக்கோயிலும் ஒன்றாகும். அக்குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டோம்.

அதனைத் தொடர்ந்து, காளிகாம்பாள் திருக்கோயிலில் சுமார் ரூ. 1.51 கோடி செலவில் பாலவிநாயகர் சன்னதி, முருகர் சன்னதி, நாகராஜா சன்னதி உட்பட 17 திருப்பணிகளை தொடங்கி வைத்தோம். 400 ஆண்டுகள் பழமையான இத்திருக்கோயிலுக்கு வருகின்ற செப்டம்பர் 4ஆம் தேதி குடமுழுக்கு நடத்திடும் வகையில் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும். அதே போல் இத்திருக்கோயிலுக்கு சுமார் ரூ.3 கோடி செலவில் திருக்கோயில் நிதி, உபயதாரர் நிதியின் மூலம் அறங்காவலர் குழுவின் பெருமுயற்சியினால் வெள்ளித் தேர் உருவாக்கப்பட்டு வருகிறது. வரும் மே மாதம் 28ஆம் தேதி வெள்ளோட்டத்திற்கு பின் பக்தர்கள் நேர்த்திக் கடன் செலுத்த அர்ப்பணிக்கப்படும். சொன்னதை செய்கின்ற அரசு, செய்வதைத்தான் சொல்லுகின்ற அரசு என்பதற்கு இந்த வெள்ளித் தேரே ஒரு சாட்சியாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்றபின், இதுவரை 2,956 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடந்தேறி இருக்கின்றது. 3,000வது குடமுழுக்கு வருகின்ற ஜூன் மாதம் 5ஆம் தேதி நாகப்பட்டினம் மாவட்டம், திருப்புகலூர், அக்னிபுரீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். அதோடு மட்டுமல்லாமல் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு திருக்கோயில் இடங்களை அடையாளம் காட்டுகின்ற வகையில் திருக்கோயில் நிலங்களை அளவிடும் பணி மயிலாப்பூரில் தொடங்கினோம். அதன் நீட்சியாக 50,001வது ஏக்கரை காஞ்சிபுரத்திலும், ஒரு லட்சம் ஏக்கரை பெரியபாளையத்திலும் அளவீடு செய்து தற்போது 2,00,001 வது ஏக்கர் நிலத்தினை அளவிடும் பணியினை வருகின்ற 21ஆம் தேதி திரும்பெரும்புதூரில் தொடங்க உள்ளோம். இது இந்து சமய அறநிலையத் துறையின் வரலாற்றில் ஒரு புரட்சி என்றால் அது மிகையாகாது.

கடந்த நான்காண்டுகளில் திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.7,671.23 கோடி மதிப்பிலான 7,560 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மாநில வல்லுநர் குழுவினால் 12,104 திருக்கோயில்களுக்கு இதுவரை திருப்பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுமொ த்தமாக கடந்த நான்காண்டுகளில் ரூ.5,948.62 கோடி மதிப்பிலான 25,485 திருப்ப ணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் உபயதாரர்கள் மட்டும் ரூ.1,339 கோடி மதிப்பிலாக 10,534 திருப்பணிகளை செய்து தருகின்றனர். எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு திராவிட மாடல் ஆட்சியில் தான் இந்து சமய அறநிலையத்துறையில் இத்தகைய பெருந்தொகையில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, உபயதாரர்கள் அதிக அளவில் திருப்பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி செய்து தருகின்றனர். இப்படி பல்வேறு திருப்பணிகளை மேற்கொண்டு வரும் இந்த ஆட்சியினை பக்தர்கள் பக்தி பரவசத்தோடு ஆன்மீக ஆட்சி என்று புகழ்வது மேன்மேலும் எங்களுக்கு இறைப் பணியில் ஊக்கத்தையும் ஆக்கத்தையும் தந்து கொண்டிருக்கிறது.

நாங்கள் எவ்வித ஆர்ப்பாட்டமும், ஆரவாரமும் இல்லாமல் அமைதியாக இறைவனுக்கு தொண்டு செய்து கொண்டிருக்கின்றோம். 3,000ஆவது திருக்கோயில் குட முழுக்கை நாகப்பட்டினம் மாவட்டம் திருப்புகலூர் திருக்கோயிலில் நடத்த இருக்கின்றோம். அதில் துறையின் அமைச்சர் என்ற முறையில் நானும், அந்த மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளோம்.

துணை முதலமைச்சர் அவர்கள் திருவல்லிக்கே ணியில் அன்னதானத் திட்டத்தை தொடங்கி வைத்தது குறித்து திருமதி தமிழிசை தெரிவித்துள்ள கருத்துக் குறித்து கேட்டீர்கள். அவர்கள் கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்கின்றனர். நாவலர் அவர்களின் பாணியில் சொல்ல வேண்டுமென்றால் பழுத்த மரத்தில் தான் கல்லடிபடும். ஆகவே எங்களுடைய துணை முதல்வர் அவர்கள் புகழின் உச்சியில் இருக்கின்றார். முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுத லோடு தளபதிக்கு தோள் கொடுத்து சுமக்க தயாராக இருக்கிறார் என்பதைதான் இது போன்ற விமர்சனங்கள் எடுத்துக்காட்டுகிறது. எம்மதமும் சம்மதமே, எல்லோருக்கும் எல்லாம் என்ற இந்த ஆட்சியில் அன்னதானத் திட்டத்தை துவக்கி வைப்பதில் எந்த விதமான தவறும் இல்லை. இறைப்பசியோடு வருகின்ற பக்தர்களுக்கு வயிற்றுப் பசியையும் போக்குகின்ற ஆட்சி இந்த ஆட்சி என்பதற்கு அந்த அன்னதானத் திட்டமே ஒரு உதாரணமாகும்.

ஆளுநர் அவர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் இந்த மூன்று ஆண்டுகள் தான் சம்பந்தமே. அதற்கு முன் அவருக்கு தமிழ்நாட்டில் என்ன சம்பந்தம் என்று சொல்லுங்கள். தமிழே இங்க வந்து தான் கற்றுக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார். அவர் தமிழ் கலாச்சாரத்தை பற்றி பேசுவது சாத்தான் வேதம் ஓதுவதை போல் உள்ளது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஐ.முல்லை, உதவி ஆணையர் க.சிவக்குமார் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் இ.எம்.எஸ். மோகன், அறங்காவலர்கள் எஸ்.சர்வேஸ்வரன், வி.சீனிவாசன், இரா.இராஜேந்திரகுமார், ஜெ.ரமேஷ், திருக்கோயில் சிவாச்சாரியார் காளிதாஸ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மைனர் மோசஸ்

### மே 20 (1993)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு தீவிர அரசியலில் ஈடுபட்டு சென்னை நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.

சென்னை மாநகர மேயர் பொறுப்பு வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“சிரித்த முகம் – செம்மாந்த நோக்கு – சிங்கத்தின் நடை – உடையணிந்து காட்சி தந்தால் ஒரு ராஜகம்பீரம் – இத்தனைக்கும் மேலாக உள்ளமோ கள்ளமொன்றில்லாத் தூய்மையின் இருப்பிடம்! தும்பை மலர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய இரங்கல் உரையில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. தில்லைவில்லாளன்

### மே 20 (2008)



திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர். திராவிட நாடு இதழில் துணை ஆசிரியராக பணியாற்றியவர்.

அண்ணாவின் ‘சந்திரோதயம்’, ‘சந்திரமோகன்’, ‘நீதிதேவன் மயக்கம்’ ஆகிய நாடகங்களில் அண்ணாவுடன் இணைந்து நடித்தவர்.

நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டத்தின் போது கைதாகி சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், 1948ல் முரசொலி வார இதழில் இவரைத் தொடர்ந்து சிறுகதை, கட்டுரைகளை எழுத வைத்தார். தலைவர் கலைஞர் அவர்களிடம் தனிப்பாசம் கொண்டிருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கண்டனப் பொதுக் கூட்டம்!

### தாயகம் கவி எம்.எல்.ஏ. சிறப்புரை!

வேலூர், மே 20-

வேலூர் மாநகர தி.மு.க. இளைஞர் அணி சார்பில் அண்ணா கலையரங்கம் அருகில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் தி.மு.க. பொதுக் கூட்டம் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் யூ.ரவிக்குமார் தலைமையில் நடந்தது. இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் இப்ராஹீம், சதிஷ் குமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசினார்கள்.

பகுதிச் செயலாளர்கள் ஆர்.இ.பி.சசிக்குமார், எம்.ஏ.கணேஷ்சங்கர், எஸ். தயாள்ராஜ், வி.ஜி.கே.சுந்தர விஜி, ஆர்.சத்திய மூர்த்தி, ஜி.பாலமுரளி கிருஷ்ணன், சி.எம்.தங்க துரை, ஆர்.கே. ஐயப்பன், தி.அ.முன்வர்பாஷா, பி.முருகபெருமாள் ஆகி யோர் முன்னிலை வகித்த னர்.

கூட்டத்தில் தி.மு.க. அமைப்பு துணைச் செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றி னார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ. முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., கழக கொள்கை பரப்பு மாநில துணைச் செயலாளர் முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ். விஜய், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மாநில சிறுபான்மை நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் எம்.நூருல்லா, மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வேலூர் ரமேஷ், மாவட்ட இளை ஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த்தாண்டன், முன்னா ஷெரீப், வி.எம்.டி.ஏ.பாலாஜி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

